O.S.No.55/2018

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 23.03.2026

P.W.1:சந்திரசேகர் த/பெ– ராமசாமி

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) இவ்வழக்கை என் தகப்பனார் ராமசாமி தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் நான் ஆதம்பாக்கம், சென்னை -88 ல் வசித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கடந்த 4 வருடமாக நான் அங்கு வசித்து வருகிறேன். 1ம் பிரதிவாதி அழகம்மாள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 2010ம் வருடம் எனது அப்பா மாவட்ட வருவாய் அலுவலர் நீதிமன்றத்தில் மனு செய்த விபரம் எனக்கு தெரியும். சர்வே எண்.103/6 ல் 1 ஏக்கர் 70 செண்ட் இடம் முழுவதற்கும் மாவட்ட வருவாய் அலுவலர் நீதிமன்றத்தில் மனு செய்தார் என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 1.70 செண்ட் என்றால் அதன் விபரம் தெரியவில்லை.

2) எனது தகப்பனார் ராமசாமி கொடுத்த மனுவின் மீதான விசாரணையில் கலந்து கொண்டார். எனது தரப்பில் எனது தகப்பனார் பெயரில் உள்ள நில உடைமை குறிப்பேடு அசல் மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.103/6 என்பது 103/6 ஏ, 103/6 பி மற்றும் 103/சி என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் கொடுத்த மனுவின் மீது விசாரணை நடந்து 24.11.2017ம் தேதி மாவட்ட வருவாய் அலுவலர் நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

3) மேற்படி உத்தரவில் சர்வே எண்.103/6 ஏ என்பது ஆதிதிராவிடர் நலத்துறையால் கையகப்படுத்தப்பட்டது என்றும், சர்வே எண்.103/6 பி எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், சர்வே எண்.103/6 சி அழகம்மாள் என்பவருக்கு 35 வருடங்களுக்கு மேலாக அனுபவத்தில் இருந்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. மேற்படி விசாரணையில் அழகம்மாள் தரப்பில் 7 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த பின்னர் 2021ம் வருடம் முதல் இவ்வழக்கு விபரத்தை நான் தெரிந்து கொண்டேன். 2010 முதல் 2021ம் வருடம் வரை தாவா சொத்து சம்மந்தமாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் முழு விபரம் தெரியாது, ஓரளவு விபரம் தெரியும்.

4) சர்வே எண்.103/6 சி சொத்தின் அனுபவம் எனது தகப்பனாருக்கு முந்தைய காலம் முதல் தற்போது வரை ஒருபோதும் எங்கள் அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. எனது பாட்டி பெயர் சு.அழகம்மாள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வெ.அழகம்மாள் என்றால் சரிதான். சர்வே எண்.103/6 சி எங்களுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதற்கு மூல ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்தேன் என்றால் எனது வழக்கறிஞரிடம் ஆவணம் கொடுத்தேன். மேற்படி ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யாமல் உள்ளதற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர வேறு ஆவணம் எனது தரப்பில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.103/6 சி எங்கள் அனுபவத்தில் இல்லை என்றும், அதற்கான ஆவணம் எதுவும் இல்லை என்றும், அதனால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) 25.09.2015ம் தேதி 1ம் பிரதிவாதி, தனது மகன் தங்கசாமி என்பவருக்கு சர்வே எண்.103/6 சி-ஐ தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி சாத்தூர் சார்பதிவக அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி தெரியவில்லை. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை என்றும், வழக்கு பற்றிய எனக்கு எதுவும் தெரியாது என்றும், எனது தகப்பனார் தாக்கல் செய்த வழக்கை மேல் நடத்த வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கணவர் வெள்ளைச்சாமி உயிருடன் இருந்த போது அழகம்மாள் தனது மக்கள் பழனிச்சாமி மற்றும் தங்கசாமி ஆகிய நால்வரும் கூட்டாக சேர்ந்து தாவா சொத்தை ராமமூர்த்தி என்பவருக்கு 28.05.2007ம் தேதி அடமானம் எழுதி சாத்தூர் சார்பதிவகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ள விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் வில்லங்க சான்று பார்த்த போது தெரிந்து கொண்டேன். அதற்கான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) மாவட்ட வருவாய் அலுவலர் நீதிமன்றம் கொடுத்த உத்தரவின் பேரில் மேல்முறையீடு செய்து கொள்ள சொன்னதின் பேரில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பட்டா பாஸ்புக் தாவா சொத்திற்கான உரிமை மூல ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விபரம் தெரியாது என்றும் எனது தகப்பனார் தாக்கல்செய்த வழக்கை தொடர்ந்து நடத்துவதற்காக வழக்கு பற்றி தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கேட்ட பரிகாரத்திற்கு ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை என்பதால் நாங்கள் கோரிய பரிகாரம் கிடைக்கக்கூடியது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வழக்கிற்கு முன்னும், பின்னும் நாங்கள் சுவாதீனத்தில் இல்லை என்பதால்

நாங்கள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியது இல்லை என்றால் சரியல்ல.

7) எங்கள் ஆதாரமற்ற வழக்கினால் 1 மற்றும் 4 பிரதிவாதிகள் மிகுந்த மன உளைச்சல் மற்றும் பண விரயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.எங்கள் வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கை தாக்கல் செய்ய எங்களுக்கு வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. அதனால் எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.